கிறோம். ஒப்புதல் கிடைத்தவுடன் 1982 இறுதிக்குள் அது செயல்படும். அப்படிச் செயல்படுகிற அந்தத் திட்டத்தின் வாயிலாக ஏறத்தாழ ஒரு லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து பால்பவுடர் செய்கிற வகையில் கொள்திறன் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: ஒரு லட்சம் லிட்டர் பால் கொள் முதல் செய்து இயங்கினால்தான் அந்தப் பால் பவுடர் தொழிற் சாலை இயங்க முடியும் என்ற நிலையில், இப்பொழுது சராசரி யாக 25,000 லிட்டர்தான் உற்பத்தி இருக்கிறது என்ற நிலையில் பால் உற்பத்தியை ஒரு லட்சம் லிட்டர் அளவுக்குச் செய்ய வேண்டிய வழி வகைகளை முன் கூட்டியே செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அதற்காகத்தான் ஆங்காங்கு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்கி வருகிறோம். அதைப் போலவே பால் விவசாயி களுக்குத் தேவைப்பட்ட மாடுகளைப் பல்வேறு திட்டங்கள் வாயிலாகக் கொடுத்து வருகிறோம். இப்படி உருவாகுகிற போது நம்முடைய அந்தக் குறியீடு நிறைவேறும் என்று கருதுகிறேன்.

திருச்செந்தூர் தாலூக்கா பாரஸ்ட் தேரியிலுள்ள பனை மரங்களினால் கிடைத்த வருமானம்.

*வினா எண். 27—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் தாலுகா பாரஸ்டு தேரியில் உள்ள பனை மரங்களினால் எந்தவிதமான வருமானமும் அரசுக்குக் கிடைக்கவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அங்கு பனை மரக் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி பனைப்பொருள் தயாரிப்பது பற்றிய திட்டம் ஏதும் மேற்கொள்ளப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை. தேரியில் உள்ள பன்னிரண்டு குத்தகைப் பிரிவுகள் குத்தகை காலம் 1—1—1979 முதல் 31—12—1982 முடிய ஆண்டுக்கு ரூ. 76·572 வீதம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

(ஆ) இக் கேள்வி எழ இடமில்லை.

1982 பிப்ரவரி 4]

திரு. எஸ். என். இராமசாமி : பாரஸ்ட் தேரியில் அதிக பனை மரங்கள் இருப்பதால் தனி நபர்கள் ஏலத்தில் எடுத்துக் கொண்டு அரசுக்கு வருமானம் கிடைக்காமல் போய்விடுகிற காரணத்தால், நூறு, இருநூறு, ஐந்நூறு என்ற பங்கீட்டு முறையில் ஏலத்தில் விட்டால் அரசுக்கு அதிக லாபம் வரும் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மொத்தமாக ஏலத்தில் விடப்படவில்லை. பன்னிரெண்டு பகுதிகளாகப் பிரித்துத்தான் ஏலங்கள் விடப்படுகின்றன. ஆகவே, இப்போதுள்ள நடைமுறை பிரித்து விடுகிற நிலைமையில்தான் இருக்கிறது.

சென்னையில் அரசின் சார்பில் 5 நட்சத்திர அந்தஸ்தில் சுற்றுலா விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண். 28—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகளுக்கு சென்னையில் ங்கிட 5 நட்சத்திர அந்தஸ்தில் சுற்றுலா விடுதி அரசின் சார்பில் ட்டிட எண்ணமுண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது எங்கு கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் . (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. செ. இராமலிங்கம் : அண்மைக் காலத்தில் வளைகுடா நாடுகளில் இருந்து சென்னையைத் தவிர மற்றப் பெரு நகரங்களுக்கெல்லாம் பெரும் பணக்காரர்கள் வந்து தங்கி கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சென்னையில் தங்குகிற வகையில் நவீனமான விடுதிகளைச் சுற்றுலா வாரியம் கட்டினால் அதிக வருமானம் வரும். ஆகவே, அதைப் பற்றி மறு பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : வெளிநாடுகள், அராபிய நாடுகளில் இருந்து வருகிறவர்கள் தங்குவதற்காக ஐந்து நட்சத்திர ஒட்டலை அரசோ, சுற்றுலாத் துறையோ கட்டுவது என்பது அவ்வளவு லாபகரமாக இருக்காது. அது மிகப் பெரிய முதலீட்டில் நடத்தப்படுகிற ஒரு தொழில். இப்போது தனியார் மிகப் பெரிய அளவில் சென்னை நகரத்திலேயே புதிய ஒட்டல்களை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு சுற்றுலாத் துறை, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடுத்தர வருவாய்